Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.
Case No. C.C.No. 86 /2025

Deposition of witness for Prosecution – P.W.2 Date : 06.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | கருப்புசாமி | Village : | அன்னூர் |
| Father's Name : | முத்துச்சாமி | Taluk : | அன்னூர் |
| Age : | 54 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of March 2026 **(A1 present. 2nd Accused absent. Section 355 BNSS petition filed and allowed.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது அன்னூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் காவல் நிலைய வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திருமதி. நித்யா மற்றும் இரண்டு காவலர்கள் கடந்த 13.12.2023ம் தேதி மதியம் 15.30 மணியளவில் ரோந்து பணியில் ஈடுப்பட்டிருந்தபோது ஆய்வாளருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குப்பேபாளையம் – காரமடை ரோட்டில் உள்ள எழில் ரெஸ்டாரண்டில் சட்ட அனுமதியின்றி மது விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆய்வாளரும் இரு காவலர்களும் சம்பவ இடம் சென்றுள்ளனர் அங்கு ஆய்வாளர் நடத்திய விசாரணையின் விளைவாக ஆஜர் எதிரியும் மற்றொரு எதிரியும் முறைப்படி அனுமதி வாங்காமல் சுமார் 737 மது பாட்டில்கள் சுமார் 159.9 லிட்டர் அளவுள்ளதை அனுமதியின்றி உணவருந்தும் ரெஸ்டாரண்டில் விற்பனைக்காக வைத்திருந்தது தெரியவந்துள்ளது. அதனால் சம்பவ இடத்திலேயே காவல் ஆய்வளார் அவர்கள் எதிரிகள் இருவரையும் கைது செய்து பொதுமக்கள் சாட்சிகள் யாரும் இல்லை என்பதால் காவலர்கள் குருசாமி மற்றும் கருணாகரன் ஆகியோர் முன்னிலையில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். பின்னர் எதிரிகளை நிலையம் அழைத்து வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு சொத்துக்களை படிவம் 91ன் மூலம் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு முன்னிலைப்படுத்தும் போது நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக 4(1)(aaa) TNP Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். (**அந்த கைப்பற்றுதல் மகஜர், முதல் தகவல் அறிக்கை, படிவம் 91 ஆகியவை முறையே அ.சா.ஆ. 2 முதல் 4 வரையாக குறியீடு செய்யப்படுகிறது, வழக்கு சொத்துக்களான 737 பாட்டில்கள் அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் தகவலாளி, புலன் விசாரணை அதிகாரி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நபர் ஆகிய மூன்றுமே காவல் ஆய்வாளர் நித்யா என்றால் சரிதான். அ.சா.1 காவலர் வழக்கு சம்பவ இடத்திற்கு மதியம் 15.30 மணிக்கு சென்றதாக தான் வாக்கு மூலத்தில் கண்டுள்ளது. அவரது வாக்குமூலத்தில் தோட்டத்திலிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் என்றால் இல்லை, ரெஸ்டாரண்டிற்கு பின் இருந்து எடுக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது. இரண்டு எதிரியிடம் இருந்து தனித்தனியாக எவ்வளவு மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டுள்ளது

என்று குறிப்பிட்டு காட்டியுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது தவறாக முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. எதிரிகளிடம் இருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் தவறு. இவ்வழக்கில் தனி நபர் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்று சொன்னால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur